# வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை

இணைந்து வழங்குபவர்கள்

பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை

ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்

ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் : | திண்டுக்கல் | காலம் : | 05/02/2022 | முதல் | 09/02/2022 |
| அறிக்கை எண் : | 010/ 2022 | வெளியீட்டு நாள் : | 04/02/2022 | | |

## திண்டுக்கல் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 33° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 20° - 24° செல்சியஸ் ஆகவும் பதிவானது.

| கடந்தவார வானிலை (01.02.2022 முதல் 03.02.2022) | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 09-02-2022- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01/02 | 02/02 | 03/02 | | தேதி | நாள்-1 05/02 | நாள்-2 06/02 | நாள்-3 07/02 | நாள்-4 08/02 | நாள்-5 09/02 |
| 0.0 | 0.0 | 0.0 | | மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 33 | 33 | 33 | | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 33 | 33 | 33 | 33 | 33 |
| 24 | 21 | 20 | | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 22 | 22 | 22 | 22 | 22 |
| 4 | 4 | 3 | | மேக மூட்டம் (ஆக்டா) | 4 | 4 | 5 | 6 | 6 |
| 76 | 86 | 75 | | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 85 | 85 | 85 | 85 | 85 |
| 50 | 55 | 45 | | | 45 | 45 | 45 | 45 | 45 |
| 11 | 7 | 5 | | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 6 | 6 | 6 | 8 | 8 |
| **வட கிழக்கு** | **கிழக்கு** | **கிழக்கு** | | **காற்றின் திசை** | கிழக்கு | கிழக்கு | **வட கிழக்கு** | **வட கிழக்கு** | **வட கிழக்கு** |

**குறுஞ்செய்தி** :

அடுத்த 5 நாட்களுக்கு அதிகபட்ச வெப்பநிலையானது 33° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 22° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 6 முதல் 8 கி.மீ வேகத்தில், கிழக்கு மற்றும் வடகிழக்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

அடுத்த வாரத்திற்கான விரிவாக்கபட்ட வரம்பு வானிலை முன்னறிவிப்பு (04-10 பிப்ரவரி 2022) :

மழைப்பொழிவு :

நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, அடுத்த 7 நாட்களுக்கு மாவட்டத்தில்பொதுவாக வறண்டவானிலையே நிலவும்.

அதிகபட்ச வெப்பநிலை :

அடுத்த 7 நாட்களுக்கு அதிகபட்ச வெப்பநிலையானது பொதுவாக இயல்பை நெருங்கக்கூடும். மாவட்டத்தின் சமவெளிப்பகுதிகளில் பெரும்பாலும் 28°செல்சியஸ் முதல் 34°செல்சியஸ் வரை காணப்படும்.

குறைந்தபட்ச வெப்பநிலை :

குறைந்தபட்ச வெப்பநிலையைபொருத்தமட்டில், அடுத்த 7 நாட்களுக்கு பொதுவாக இயல்பான அளவே காணப்படும், மாவட்டத்தில் 18°செல்சியஸ் முதல் 22°செல்சியஸ் வரை இருக்கும்.

## எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்

## முக்கிய பயிர்கள் : மிளகாய், வெங்காயம், கால்நடை

### மிளகாய்:

தற்போது நிலவும் பருவசூழ்நிலையின் காரணமாக மிளகாய் பயிரைத் தாக்கும் பச்சை பேரி அசுவிணி தாக்குதல் தென்படுகின்றது. இந்த வகையான அசுவிணி தாக்கப்பட்ட செடிகள் வெளுத்துபோய் நோயால் பாதிக்கப்பட்டது போன்று காணப்படும். இதன் காரணமாக மிளகாய் செடியின் இலையில் சுருக்கங்கள் ஏற்பட்டு சுருண்டு விடும். இவ்வகையான அசுவிணி வெளியேற்றும் தேன்துளி போன்ற திரவம் கரும்புகைப் பூசணத்தை ஏற்படுத்துகிறது. அசுவிணி தாக்கப்பட்ட செடிகள் குட்டையாகி வளர்ச்சி குன்றி காணப்படும். இதனைக் கட்டுப்படுத்த 10 லிட்டர் தண்ணீருக்கு 3½ மில்லி என்ற அளவில் இமிடாகுளோப்ரிட் 17.8 சதம் என்ற பூச்சிக்கொல்லி மருந்தினை தெளிக்கவும்.

### வெங்காயம்:

தற்போது நிலவும் தட்பவெப்ப சூழ்நிலையில் வெங்காயப் பயிரில் இலைப்பேன் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. இதன் தாக்குதலால் வெங்காயத்தின் இலை முழுவதும் வெண்திட்டுக்கள் காணப்படும். கடுமையாக தாக்கப்பட்ட இலைகள், நுணியில் இருந்து காயத் தொடங்கும். வயலைச் சுத்தமாகவும், சீரான இடைவெளியில் களை எடுப்பதன் மூலம் இலைப் பேனைக் கட்டுப்படுத்தலாம் இந்த வகையான பூச்சித் தாக்கப்பட்ட வயல்களை வெள்ளப்பாசன முறையில் நீர்பாசனம் செய்து இலைப்பேன்களின் நடமாட்டத்தை குறைக்கலாம். ஒரு ஏக்கருக்கு 300மில்லி புகையிலைக் கசாயம் மற்றும் 350மில்லி மீன் எண்ணெய் ரெசின் சோப் என்ற அளவில் தண்ணீரில் கலந்து தெளித்தும் கட்டுப்படுத்தலாம்.

### கால்நடை:

ஆடு வளர்க்கும் விவசாயிகள் தங்களின் வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடுகளில் வெளிப்புற ஒட்டுண்ணிகளை நீக்க 2 மில்லி பூட்டாக்ஸ் மருந்தினை 1 லிட்டர் தண்ணீரில் கலந்து ஆடுகளில் வெளிப்புறங்களில் மட்டும் பூச வேண்டும்.